இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 279 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 06 – சனிக்கிழமை 20 மே 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 279 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 06 - Saturday 20 May 2023 - Chennai 12 Pages ₹ 5.00

### ரூ.92.50 கோடி மதிப்பீட்டில்

# தூத்துக்குடி - தஞ்சாவூர் - சேலம் மாவட்டங்களில் மினி ‘டைடல்’ பூங்காக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, மே 20 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.05.2023) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், 92 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி, தஞ்சாவூர், மற்றும் சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைத்திட அடிக்கல் நாட்டினார்.**

அதன் விவரம் வருமாறு:-

எதிர்காலத்தில் தகவல் தொழில் நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய அதீத வளர்ச்சியை கருத்திற்கொண்டு 1996-2001ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் சென்னையில் டைடல் பூங்காவை நிறுவினார்கள். இது நம் மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத்துறையில் மாபெரும் வளர்ச்சி ஏற்படவித்திட்டது.

‘பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி, சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி’ என்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது எண்ணத்திற்கேற்ப, தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், தற்போது இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி பரப்பளவில் ஏழு மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் அடிக்கல் நாட்டினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.05.2023) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், 92 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைத்திட அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச. கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**மினி டைடல் பூங்கா, தூத்துக்குடி!**

தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டான் II பகுதியில் 4.16 ஏக்கர் நிலப்பரப்பளவில் 32 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 63,100 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் 4 தளங்கள் கொண்ட மினி டைடல் பூங்கா கட்டப்படவுள்ளது.

**மினி டைடல் பூங்கா, தஞ்சாவூர்!**

தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டியில் 3.40 ஏக்கர் நிலப்பரப்பளவில், 30 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 55,000 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் 3 தளங்கள் கொண்ட மினி டைடல் பூங்கா கட்டப்படவுள்ளது.

**மினி டைடல் பூங்கா, சேலம்!**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஆணைகௌண்டன்பட்டி மற்றும் கருப்பூர் பகுதிகளை உள்ளடங்கிய நிலப்பரப்பள வில், 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 55,000 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் 3 தளங்கள் கொண்ட மினி டைடல் பூங்கா கட்டப்படவுள்ளது.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம், தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்கள் மற்றும் அவற்றின் சுற்றுவட்டார பகுதிகளில் வசித்து வரும் ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்கள் வசித்துவரும் மாவட்டங்களிலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். மேலும், இவை, அப்பகுதிகள் சமூகபொருளாதார வளர்ச்சியடையவும், ஒட்டுமொத்தமாக மாநிலத்தின் வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் செயலாளர் மற்றும் டைடல் பூங்கா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ம.பல்லவி பல்தேவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

கர்நாடக மாநில முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவில் -இன்று

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

மல்லிகார்ஜுன கார்கே – சித்தராமையா தொலைபேசியில் பேசினர்

**சென்னை, மே 20 -**

**பெங்களூரில் நடைபெறவுள்ள கர்நாடக மாநில முதலமைச்சர் பதவியேற்பு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்திட அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சித்தராமையா ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக அழைப்பு விடுத்துள்ளனர்.**

**அவர்களின் அழைப்பை ஏற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று கர்நாடக மாநில முதலமைச்சர் பதவி ஏற்பில் பங்கேற்கிறார். இதற்காக முதல்வர் அவர்கள், நேற்று இரவு சென்னையில் இருந்து பெங்களூரு சென்றடைந்தார்.**

கர்நாடக மாநில பொதுத் தேர்தலில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை இடங்களைப் பிடித்து வெற்றி பெற்றதையடுத்து, கர்நாடக மாநில முதலமைச்சராக சித்தராமையா அவர்கள் இன்று (20.5.2023) பதவியேற்கவுள்ளதால், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் சித்தராமையா ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.5.2023) தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு இன்று ( 20.5.2023) பெங்களூரில் நடைபெறவுள்ள பதவியேற்பு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்தனர்.

இதற்கிடையே கர்நாடக முதலமைச்சராக சித்தராமையாவும் துணை முதலமைச்சராக டி.கே.சிவக்குமாரும் இன்று பதவியேற்கிறார்கள். பெங்களூரு கான்டீரவா மைதானத்தில் நடைபெறும் பதவியேற்பு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்.

முன்னதாக இவ்விழாவில் பங்கேற்றிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19-05-2023) இரவு சென்னையிலிருந்து பெங்களூர் சென்றடைந்தார்.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் 135 இடங்களை கைப்பற்றி மாபெரும் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு! 91.39% பேர் தேர்ச்சி!

சென்னை, மே 20-

தமிழகத்தில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வு முடிவுகளை தேர்வுத்துறை இயக்குநர் சேதுராம வர்மா வெளியிட்டார். 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 91.39% பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவிகள் தேர்ச்சி விகிதம் 94.66%, மாணவர்கள் தேர்ச்சி விகிதம் 88.16% ஆக உள்ளது.

10ம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி விகிதத்தில் மாநில அளவில் பெரம்பலூர் மாவட்டம்(97.67%) முதலிடத்தில் உள்ளது. 2வது இடத்தை சிவகங்கையும் (97.53%), 3வது இடத்தை விருதுநகர் மாவட்டமும்(96.22%)பிடித்துள்ளது. 10ம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய 264 சிறைவாசிகளில் 112 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

www.tnresults.nic.in, www.dge.tn.gov.in என்ற இணையதளங்களில் சென்று தேர்வு முடிவுகளை மாணவர்கள் அறிந்து கொள்ளலாம்.

மேலும் மாணவர்கள் படித்த பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிட்டு இருந்த செல்போன் எண்ணுக்கும், தனித்தேர்வர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கும் போது சமர்ப்பித்த செல்போன் எண்ணுக்கும் மதிப்பெண்கள் குறுஞ்செய்தி வழியாக அனுப்பப்பட உள்ளன.

---

### பாலிடெக்னிக் படிப்பில் சேருவதற்கு இன்று முதல் விண்ணப்பம்!

# பொறியியல் கலந்தாய்வு - ஜூலை 2 - ல் தொடங்குகிறது!

## உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அறிவிப்பு!

சென்னை, மே 20-

பாலிடெக்னிக் படிப்பில் சேருவதற்கு இன்று முதல் விண்ணப்பம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பொறியியல் கலந்தாய்வு ஒரு மாதம் முன்னதாக ஜுலை 2 ஆம் தேதி தொடங்கும் எனவும் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர் உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர்,

பாலிடெக்னிக் எனப்படும் தொழில்நுட்ப பட்டய படிப்பில் சேருவதற்கு நாளை (20.05.2023) முதல் விண்ணப்பிக்கலாம் என கூறினார். பொறியியல் கலந்தாய்வு ஆகஸ்ட் 2 ஆம் தேதி தொடங்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், ஒரு மாதம் முன்னதாக ஜுலை 2 ஆம் தேதியே தொடங்கப்படும் என்று கூறினார்.



தொடர்ந்து பேசிய அமைச்சர் பொன்முடி, கலை, அறிவியல் படிப்புகளுக்கு இதுவரை 2 லட்சத்து 58 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும், இன்று (அதாவது நேற்று) கடைசி நாள் என அறிவிக்கப்பட்ட நிலையில், மேலும் 3 நாள் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்வதற்கு மாணவர்கள் அதிக அளவில் ஆர்வம் காட்டினால், கடந்த ஆண்டை போன்று இந்த ஆண்டும் கூடுதல் இடங்கள் ஒதுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

முதலில் சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நடக்க உள்ள நிலையில் ஜுலை 7ந்தேதி முதல் பொதுப் பிரிவு கலந்தாய்வு தொடங்கும். அனைத்து கலை அறிவியல் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை கட்டணம் குறைக்கப்படுகிறது.

ஒவ்வொரு கல்லூரியிலும் பலவிதமான கட்டணங்கள் வசூலிக்கப்பட்டன. ஏழை மாணவர்கள் நலன் கருதி எல்லா கல்லூரிகளிலும் சேர்க்கை கட்டணம் ஆண்டுக்கு ரூ.200 வீதம் ஒவ்வொரு ஆண்டிற்கும் இனி வசூலிக்கப்படும். அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் சேருவதற்கு மேலும் 3 நாட்கள் அவகாசம் கொடுக்கப்படுகிறது. 22ந்தேதி வரை மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் அமைச்சர் க.பொன்முடி குறிப்பிட்டார்.

---

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம்! நாளை நடைபெறுகிறது!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம் நாளை (21.5.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

அதுபோது உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்
தி.மு.க.